# பிழைப்பூட்டும் இறைவன்

**2011**
**செப்டம்பர்**
**1**
**வியாழன்**

காலை
1இரா. 17:1–6

தி. வ.
1இரா. 17 : 4
**“அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன்”**

மாலை
மத். 6:25–34

சிந்தனை
**கொஞ்சம் எண்ணெய்யும் கொஞ்சம் மாவும் பஞ்சம் முழுமைக்கும் நம்பிக்கைதான் வாழ்க்கை.**



இஸ்ரயேல் நாட்டை ஆண்ட அரசர்களுள் ஆண்டவரில் நம்பிக்கை வைத்து வாழ்ந்தவர்கள் மிகவும் குறைவு. ஏறக்குறைய எல்லா அரசர்களும் தீய வழியில் நடந்தனர். மக்கள் வேற்று தெய்வங்களை வழிபட்டனர். அவ்வாறு வழிபட்ட தெய்வங்களுள் ஒருவர் பாகால். பாகால் ஒரு கானானிய தெய்வம் பாகாலை மழையின் தெய்வமாகவும் நல்ல விளைச்சலைக் கொடுப்பவர் எனவும் மக்கள் நம்பினார்கள்.

அரசர் ஆகாப் தலைநகரான சமாரியாவில் பாகாலுக்குக் கோவில் கட்டி வழிபட ஆரம்பிக்கிறார். உண்மை கடவுளாகிய யாவேயை மறந்து விட்டார். இந்தச் சூழ்நிலையில் தான் அவர் முன்னிலையில் இறைவாக்கினர் எ—யா வந்து நின்று “என் வாக்கினாலன்றி, வரும் ஆண்டுகளில் பனியோ, மழையோ பெய்யாது என்றார். பாகால் மழையின் தெய்வமாகக் கருதப்பட்டதால் இது பாகாலுக்கு எதிரான சவாலாகும். யாவே மட்டுமே உண்மையான கடவுள். மழையைப் பெய்விக்கவும் நிறுத்தவும் அவரால் மட்டுமே முடியும். பாகால் கடவுளல்ல. அவரால் எதுவும் செய்ய முடியாது என்பதைக் காட்டவே இறைவாக்கினர் இந்தப் பஞ்சத்தை அறிவிக்கிறார்.

தீர்க்கர் எ—யா முத—ல் தம்மை ஆண்டவரின் பணியாளராக வெளிப்படுத்துகிறார். ஆண்டவரின் வார்த்தைக்கு உடனடியாகக் கீழ்ப்படியும் அவரது செயல் அதை உறுதிப்படுத்துகிறது.

பஞ்ச காலத்திலும் கடவுள் காகங்கள் வழியாக எ—யாவைப் போஷிக்கின்றார். கேரீத் ஆற்றின் நீரால் தாகந்தீர்க்கப்பட்டார். எந்த நிலையாயினும் கடவுள் தம் மக்களைப் பராமரித்துப் பாதுகாக்கிறார் என்பதை இந்நிகழ்வு வெளிப்படுத்துகிறது.

கடவுள் மீதும் அவரது பராமரிப்பின் மீதும் நாம் முழுமையான நம்பிக்கை கொள்ள வேண்டும். நம் அன்றாடத் தேவைகளைப் பற்றிய மித மிஞ்சிய கவலை தவறானது. அனைத்திற்கும் மேலாக கடவுளுக்கு ஏற்புடையவற்றை நாடுவோம். அவரே நமக்கு பிழைப்பூட்டுவார்.

# நற்கந்தம்

**2011**
**செப்டம்பர்**
**2**
**வெள்ளி**

காலை
1கொரி. 2:12–17

தி. வ.
1கொரி. 2 : 15
**“நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக் கிறோம்”**

மாலை
ஆதி. 221–18

சிந்தனை
**ஜீவ வாசனை என்னில் வீச செய்யுமே.**



*நறுமணம் நிறைந்த மலர்களை விரும்பும் நம்மால் நறுமணம் வீச இயலவில்லை. அழகாக அலங்காரம் செய்தாலும் அழுக்கடைந்த அந்தரங்க வாழ்வு நாற்றமடிக்கத்தான் செய்கிறது. நறுமணம் வீச நல்ல மலர்களாய் நாமிருக்க வேண்டும்.*

பவுல் இப்பகுதியில் போரில் வெற்றி பெற்ற ரோம தளபதிகள் நடத்தும் வெற்றி ஊர்வலத்தை ஒப்பிட்டு குறிப்பிடுகின்றார். இந்த வெற்றி ஊர்வலத்தில் தோல்வியுற்றவரை கைதிகளாக பிடித்து இழுத்து வருவர். அந்த ஊர்வலத்தில் நறுமணப்புகை பயன்படுத்தப்படும். இந்த நறுமணப்புகை வெற்றி பெற்றவர்களுக்கு வாசனையாக இருக்கும். அழிவுறுவோருக்கு சாவின் நச்சுப் புகையாக இருக்கும். பவுல் தமது நற்செய்திப் பணியை இத்தகைய வெற்றி ஊர்வலமாக கருதுகின்றார்.

கிறிஸ்துவோடு இணைந்து வாழும் எங்களை கடவுள் கிறிஸ்துவின் வெற்றிப் பவனியில் பங்குகொள்ளச் செய்து எங்கள் வழியாய்த் தம்மைப் பற்றி யாவரும் அறியச் செய்கிறார். இவ்வறிவு நறுமணம் போல் எங்கும் பரவுகிறது என்கிறார்.

செயற்கை மலர்களாய் அழகாயிருப்பதைவிட இயற்கை மலர்கள் போன்று மணம் வீசுவோம்.

போ—யான பக்தி வாழ்வு வாழ்கிறவர்கள் இந்த நறுமணம் கொடுக்க முடியாது. ஏன் என்றால் நறுமணம் என்பது ஒருவரை பார்ப்பதில் அல்ல அவரது பண்பில் இருக்கின்றது. அவர்களது சாய—ல் அல்ல சாட்சியான வாழ்வில் இருக்கின்றது.

தற்காலத்தில் சுய லாபத்திற்காக, கடவுளின் வார்த்தையை கலப்பாய் பேசி, மனிதர்களை புகழ்ந்து அவர்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். அவர்களால் கடவுளுக்கு நற்கந்தமாக முடியாது.

நாம் மனத்தாழ்மையோடு நடந்து, கிறிஸ்துவோடு இணைந்து வாழும்போதுதான் தேவனுக்கு நற்கந்தம் ஆவோம்.

# உபத்திரவங்களில்...

2011
செப்டம்பர்
3
சனி

காலை
ரோம. 5:1–8

தி. வ.
ரோம. 5 : 4
**"உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்"**

மாலை
யாத். 16:1–16

சிந்தனை
**மகிழ்ச்சியில் அல்ல; இகழ்ச்சியில் மகிழ்வோம்.**



அனுபவம் மிக்க முதிர்ந்த போதகர் ஒருமுறை என் முன் நிற்கின்ற பெரிய மலையைப் பார்த்து, இது என்னைவிட்டு அகன்று போகட்டும் ஆண்டவரே என்று நான் ஜெபிப்பதைவிட, நான் இதில் ஏறி மறுபக்கம் செல்வதற்கான பெலனை தாரும் ஆண்டவரே என்றுதான் நான் ஜெபிப்பேன் என்று கூறினார்.

உண்மையாகவே, நம் வாழ்வில் உபத்திரவங்கள் வரும்போது அது என்னை விட்டு அகன்று போகட்டும் என்பதைவிட அதனை பொறுமையோடு தாண்டி செல்வது மகிழ்வானது.

ஒருமுறை நம் பாரத பிரதமர் மன்மோகன்சிங் கூறும்போது "நான் ஒவ்வொரு நாளையும் தேர்வு எழுதுகின்ற மாணவனைப்போல் கருதுகின்றேன். ஆனாலும் நான் மகிழ்கின்றேன். ஏனென்றால் வெற்றி பெறுகின்றேன்" என்றார்

அப்போஸ்தலானாகிய பவுல் சொல்லும்போது உபத்திரவத்திலே மேன்மை பாராட்டுகிறோம் என்கிறார். துன்பங்களைத் தாங்கிக் கொள்வதிலும் பெருமகிழ்ச்சி கொள்கிறோம் என்கிறார். ஏனென்றால் துன்பத்தில்தான் மன உறுதி அடைகிறோம். மனஉறுதியால்தான் தகைமை அடைகிறோம். தகைமையால்தான் எதிர்நோக்கும் விளையும் என அறிகிறோம்.

இயேசுகிறிஸ்துவின் துன்பங்கள் அவர் உயிர்த்தெழுதலுக்குப் பாதையானது. அவரை பின்பற்றுகிற நமக்கும் சிலுவைப்பாதையே மீட்பின் பாதையாகும். நம்முடைய ஒவ்வொரு துன்பத்தின் வழியாக இயேசுவின் சிலுவைப் பாடுகளில் பங்கேற்க முடிகின்றது.

ரோமர் 8 : 17—இல் பவுல் கூறும்போது அவருடைய துன்பங்களில் நாம் பங்குபெற வேண்டும். அப்பொழுதுதான் அவரோடு மாட்சியிலும் பங்குபெறுவோம் என்கிறார். எனவே நாமும் நம்முடைய உபத்திரவங்களிலே மேன்மைப் பாராட்டுவோம்.

# கல்விப் பணியில் திருச்சபையின் பங்களிப்பு

**2011**
**செப்டம்பர்**
**4**
**ஞாயிறு**

காலை
நீதி. 8:1–12

தி. வ.
நீதி. 8 : 12
**“ஞானமாகிய நான் விவேகத்தோடே வாசம்பண்ணி, நல்யுக்தியான அறிவுகளைக் கண்டடைகிறேன்.”**

மாலை
1தீமோ. 6:1–10

சிந்தனை
**இறை பயம் ஞானத்தின் உறைவிடம்**



இறைவன் தமது மக்கள் ஞானமுள்ளவர்களாக, அறிவில் சிறந்தவர்களாக சிறப்பாக வாழ வேண்டும் என்று விரும்புகிறார். இறைவன் வழிகளை தெரிந்து கொள்ளும் போது, இறைவன் நமக்கு ஞானத்தை அளிக்கிறார். அவரது வசனமான வேதாகமம் நம்மை நேரான பாதையில் நடத்தி நல்ல நட்புகளை உருவாக்கவும் சரியான தீர்மானங்களை எடுக்கவும் உதவி செய்கிறது. உலக ஞானம், மனிதர்கள் வாழ்வில் இன்றியமையாதது, இதை இறைவன் அருளுகிறார். சங். 111 : 10 “கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் நீதி. 15 : 33, நீதி. 1 : 7—ல் இதே காரியத்தை சொல்லப்படுகிறது. இறைபயம், ஞானத்தின் ஊற்றாக செயல்படுகிறது. நமது இந்தியாவில், கல்வி இறைபணியை செய்ய, அருட்பணியாளர்கள் பங்கேற்பு மிகவும் குறிப்பிடதக்கது. மேற்கு வங்காளத்தில் அலெக்சாண்டர் வில்—யம்கேரி, மருத்துவகல்லூரி C.M.C. வேலூர், டாக்டர் ஐடா ஸ்கடர் போன்றோர் குறிப்பிடதக்கவர்கள். நமது கன்னியாகுமரி மாவட்டத்தில், லண்டன் மிஷனை இயக்கம் சார்ந்த சார்லஸ் மீட் போன்றோர் சிறப்பான கல்வி நிறுவனங்களை அமைத்து, கல்வி அறிவு மக்கள் பெற உழைத்தனர். இதனால் கன்னியாகுமரி மாவட்டம் முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக தமிழ்நாட்டில் சிறப்பாக கருதப்படுகிறது. மேலும் இக்கல்வி உலக கல்வியறிவு புகட்டுவதுடன் நின்று விடாது, இறை திருமறையை கற்றுக் கொடுப்பது சிறப்பு.

திருச்சபையளவில் கல்வி பணி தொடர்ந்து மக்களுக்கு கிடைக்க, சிறப்பான விழிப்புணர்வு தேவை. இன்று பரவிவரும் மேலை நாட்டு முறை கல்வி கற்றுக் கொடுத்தல், அதிக கட்டணம் மிகுந்த ஆடம்பரமான கல்வி கூடங்களை நாடுவது இவைகளை தவிர்த்து, பயிலும் மாணவ மாணவியர்களின் அறிவை வளர்க்க, அவர்கள் திறமையை அடையாளம் கண்டு ஊக்கப்படுத்துவது நலம் பயக்கும் போட்டி, பொறாமையினால் மற்ற மாணவ மாணவியரைவிட அதிகம் படிக்க வேண்டும் என்று அநேக கல்வி முறைகளை திணிப்பது ஆபத்தானது, மாறாக பிள்ளைகளின் மன நிலையை புரிந்து செயல்பட வைத்தல் சிறப்பான எதிர்காலம் உண்டாகும். திருச்சபை இத்தகைய விழிப்புணர்வை, கல்வி பணியில்

# கிறிஸ்துவில் கற்றுக்கொள்

2011
செப்டம்பர்
5
**திங்கள்**
**ஆசிரியர் தினம்**
காலை
மத். 11:25–30

தி. வ.
மத். 11 : 29
**“நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; ...என்னிடத்தில் கற்றுக்கொள் ளுங்கள்”**

மாலை
நீதி. 14:1–14

சிந்தனை
**சாந்தமும் மனத்தாழ்மையும் இயேசுவிடமே கற்றுக்கொள்ளமுடியும்**

கற்றுக் கொள்தல் என்பது மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்று.. இனி கற்பதற்கு ஒன்று இல்லை என்று யாரும் சொல்—விட முடியாது.

புத்தகங்களைப் படித்து சில காரியங்கள் கற்றுக் கொள்வது ஒரு வகை ஞானமுடையவர்கள். வார்த்தைகளை, போதகங்களை கேட்டு கற்றுக் கொள்வது மற்றொரு வகை. சான்றோரின் வாழ்க்கையில் இருந்து ஒரு சில பாடங்களை கற்றுக் கொள்கிறோம். இந்த உலகு சார்ந்த கல்வியும், பாடமும் வெறும் உலக பிரகாரமான அறிவினை மட்டும் தரமுடியும். ஆனால் மெய் வாழ்வை அடைய வேண்டுமானால் இயேசுகிறிஸ்துவின் வாழ்வு, பணி, போதனை போன்றவை பாலமாகவும், பாடமாகவும் அமையும். மெய் வாழ்வை அடைவதற்கு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள் என்று இயேசு அழைக்கிறார்.

பெரும் சுமை சுமந்து சோர்ந்து இருப்பதால் என்னிடம் வாருங்கள் என்று அழைக்கிறார். பெரும் சுமை என்று மறைநூல் அறிஞரும், பரிசேயரும் மக்கள் மீது சுமத்தின சமய கடமைகளை குறிக்கிறது. இது போல மனித கட்டுப்பாடுகளும், அளவீடுகளும் நம் கழுத்தில் பூட்டி வைத்த நுகம் போல் நம்மை அடிமைப்படுத்துகிறது. இந்த அடிமை தனத்தில் இருந்து விடுதலை பெறவும் தொடர்ந்து சிக்கிக்கொள்ளாதிருக்கவும் என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்று இயேசு நம்மை அழைக்கின்றார். இயேசு கனிவும், மனத்தாழ்மையும் உடையவர். உங்கள் மீது சுமத்தப்பட்ட சுமையை இறக்கிவைத்துவிட்டு என் நுகத்தை உங்கள் மீது ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் என்கிறார். இயேசுவில் இறையாட்சி கொள்கையை ஏற்போருக்கு அது புது நுகமாக இருக்கும். மகிழ்ச்சி தரக்கூடிய நுகமாக இருக்கும். இயேசுவின் சுமை அழுத்தாது அவரது சுமை எளிதானது.

பாவத்தினாலும் நெறி தவறிய வாழ்வினாலும் சுமை சுமந்து சோர்ந்து இருப்பவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் வரவேண்டும் அவரிடம் கற்றுக் கொள்ள வேண்டும். அன்பு, பணிவு, மன்னிப்பு, தூய்மை, தியாகம் போன்ற நற்பண்புகளை இயேசுவிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

# கடவுள் தரும் ஞானம்

**2011**
**செப்டம்பர்**
**6**
**செவ்வாய்**

காலை
நீதி. 2:1–11

தி. வ.
நீதி. 2 : 5
**“கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்”**

மாலை
1தீமோ. 6:11–21

சிந்தனை
**இறைவனை அறியும் அறிவு நன்மை தரும்.**

மன்னா சேர்ப்போம்

ஞானம் என்பதே நீதி மொழிகளின் மிக முக்கிய சொல்லாட்சியாகும். நமது வாழ்வை சிறப்பாகவும் சமூகமாகவும் நடத்துவதற்கான ஆற்றலை தருவது ஞானமே. எல்லா செயல்களிலும் விவேகமுள்ளவர்களும், மாசற்றவர்களுமாக வாழ இறைவனை அறியும் அறிவு நமக்கு தேவையாக இருக்கிறது. மேலும் இந்த அறிவு இவ் உலகில் நாம் நீதியுள்ளவர்களும், மாசற்றவர்களுமாக வாழ நம்மை தூண்டுகிறது. நீதி. 1 : 7—ல் “கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்”கடவுளை அறியும் அறிவு நமக்கு இறைபயத்துடன் கூடி நல் ஆசீர்வாதங்களை தருகிறது. நீதி. 2 : 6—ல் “கர்த்தர் ஞானத்தை தருகிறார்” இந்த விலையேற பெற்ற ஞானத்தை இறைவனை அறியும் விதத்தில் பயன்படுத்த வேண்டும். இறைஞானம், இறைவனை விசுவாசிப்பவர்களுக்கு தேவ பக்தியை வாக்குதத்தம் செய்கிறது. அவர்களுக்கு நேரான பாதையையும் காட்டுகிறது. நாம் இந்த உலகில் எது நன்மை, எது தீமை என்பதை அறிய இந்த அறிவு நமக்கு இன்றியமையாதது. இதை பெற்றுக்கொள்ள நாம் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும். எபேசி. 1: 17 “நீங்கள் அறிந்துக் கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை” பெற ஜெபிக்க வேண்டும்.

ஜெபத்திலே தரித்திருக்கும் போது, இறைவனை அறியும் அறிவு நம்மில் ஏற்படுகிறது. இதனால் பாவஞ்செய்வதி—ருந்து விடுதலை, தூய்மையான வாழ்வு இவ்வுலகில் வாழ நமக்கு வல்லமை தருகிறார். இவ்வறிவு உலகின் போ—யான அறிவு கொள்கைகளி—ருந்து நமக்கு மீட்பு தருகிறது. அப்போஸ்தலனாகிய பவுல், தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தும் போது 1தீமே. 6 : 20—ல் “ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண் பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு” இதன் மூலம் நாமும் கடவுளை அறியும் அறிவை பெறுவோம். தூய வாழ்வு வாழ்வோம்.

# அறிவில் வளருங்கள்

**2011**
**செப்டம்பர்**
**7**
**புதன்**

காலை
**2பேது. 3:12–18**

தி. வ.
2பேது. 3 : 18
**"...அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்"**

மாலை
**நீதி. 14:15–25**

சிந்தனை
**இறை அறிவு உலகை வெல்லும் ஆயுதம்**

மன்னா சேர்ப்போம்

அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதின முதல் நிரூபம் சபைக்கு வெளியே உள்ள பிரச்சினைகளைப் பற்றியதாக இருக்கிறது. இரண்டாம் நிரூபம் சபைக்கு உள்ளே உள்ள பிரச்சினைகளைப் பற்றி எழுதுகிறார். இறைவனை பற்றிய அவரை அறிகிற அறிவில் வளர, சில ஆலோசனைகளை நமக்கு தருகிறார், அழிவை ஏற்படுத்தும் பொய் போதனைகளை பேசும் போ—போதகர்கள், குறித்து நாம் எச்சரிக்கையுடன் நடந்து, நாம் ஒழுக்கமுடையவர்களாக, அறிவு, இறைபக்தி, சகோதர பிரியம், தன்னலமற்ற அன்பு இவற்றுடன் வாழ வளர அழைப்பு தருகிறார். 2பேது. 1 : 3—ல் "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், "அவருடைய வல்லமையால் பெற்றிருக்கிறோம். ஆகவே நாம் அவரை குறித்த அறிவில் வளர வேண்டும். இறை வருகை 2பேதுரு 3 : 10—ல் கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்" இறை அறிவில் வளரும் போது, இறைவனது வருகை குறித்த தெளிவு நமக்கு கிடைக்கிறது. மேலும் 2பேது. 3 : 11 "பரிசுத்த நடக்கையும், தேவ பக்தி உள்ளவர்களாயிருக்க வேண்டும்" என்று குறிப்பிடுகிறார். 2 பேது. 3 : 14 —ல் "நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்" அவருடைய சமூகத்தில் காணப்படவேண்டும். என்கிறார்.

இறை அறிவில் வளரும் போது, நாம் தூய வாழ்வுடன், தூய பக்தியுடன் இவ்வுலகில் வாழ்ந்து நன்மை பெறமுடியும். உலகில் இன்று அனேக பொய் போதனைகள் நுழைந்துள்ளதால் மனுக்குலம் வாழ்விழந்து இறை தன்மையிழந்து காணப்படுகின்றனர். 2பேது. 3 : 17—ல் "அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியி—ருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்தது என்று குறிப்பிடுவது போல நாமும் உலகில் மிக எச்சரிப்புடன் கிறிஸ்துவை பின்பற்றி அவரை அறிகிற அறிவில் வளருவோம்.

# கற்றுக் கொள்வதில் உறுதி

2011
செப்டம்பர்
8
வியாழன்

காலை
நீதி. 14:26–35

தி. வ.
நீதி. 14 : 33
**“புத்திமானுடைய இருதயத்தில் ஞானம் தங்கும்”**

மாலை
ரோ. 16:17–27

சிந்தனை
**இறை ஞானம் பெருகும். ஆன்மீக வாழ்வில் வளம் பெருகும்.**

*திருமறையை படிப்பது சாலவும் சிறந்தது. அவை துன்பத்தில் அமைதி தரும். இக்கட்டு வேளையில் உதவி செய்திடும். கர்த்தருடைய வார்த்தைகள் குணமாக்கும் (சங். 107 : 20). கர்த்தருடைய வசனங்கள் தூய்மையானவை (2 சாமு. 22 : 31; சங். 18 : 30). அவை பேதையை ஞானியாக்குபவை.*

*உரோமத் திருச்சபையில் சில கள்ளப் போதகர்கள் நுழைந்து இயேசு கிறிஸ்வின் போதனைகளுக்கு மாறான தவறான போதனைகளை போதித்து மக்களை திசைத்திருப்பினர். திருச்சபைக்குள் கொள்கை குழப்பங்கள் உருவாயின. தவறான போதனைகளுக்கு கவனமாயிருங்கள்.*

*தவறான போதனைகளை கண்டறிய வேண்டுமாயின் திருமறையை தெளிவாகக் கற்றுக்கொள்ள வேண்டும். திருமறையின் அடிப்படை உபதேசங்களை ஆழமாய் கற்று அவற்றில் வேரூன்றி நிற்க வேண்டும். அவ்வாறு நிற்பவர்கள் கற்பாறை மீது ஆழமாக தோண்டி அஸ்திபாரமிட்டு வீடுகட்டியவர் ஆவர் (மத். 7 : 24) அவர்களே. எனது உறவினர் (சகோதர, சகோதரிகள், தாய்—தந்தை) ஆவார் என இயேசு கிறிஸ்து கூறுகிறார். என்னிடத்தில் கேட்டும் கற்றும் கொள்ளுங்கள். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கும் (மத். 11 : 29). என் வார்த்தை உங்களில் நிலைத்திருந்தால் நீங்கள் அதிக கனிகளை கொடுப்பீர்கள் (யோவா. 15 : 17) எனவும் இயேசு கூறுகிறார்.*

*இன்றும் பக்க வழியாய் இயேசு கிறிஸ்துவை மறுத—ப்போர் நமது இல்லங்களில் நுழைந்து நம்மை தவறான பாதையில் அழைத்துச் செல்ல முயல அலைந்து திரிகிறார்கள். அவர்களைக் குறித்து மிகுந்த எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்.*

# விவாதங்கள் வேண்டாம்

2011
செப்டம்பர்
9
வெள்ளி

காலை
தீத்து 3:6–15

தி. வ.
தீத்து 3 : 9
**“புத்தியீனமான தர்க்கங்களையும், ...சண்டைகளையும், ... வாக்குவாதங்களையும் விட்டு விலகு;”**

மாலை
நீதி. 15:1–9

சிந்தனை
**வேண்டாட விவாதங்கள் பிரிவினையை உண்டாக்கும்.**

இயேசு கிறிஸ்து ஐக்கியத்தையும், ஒருமித்த மனதையும் விரும்புகிறவர். திருச்சபைகள் பிளவுபடுவதையும், கருத்து மோதல்கள் உருவாவதையும் அவர் விரும்புவதில்லை. ஆன்மீக வாழ்க்கையின் வளர்ச்சிக்கு பயன்படாத விவாதங்கள் தேவையில்லை என பவுல் கூறுகிறார்.

வேத வாக்கியங்களில் தெளிவு பெறுவதற்கான கேள்வி—பதில்களை திருமறை கண்டிக்கவில்லை. இயேசு தனது 12 வயதிலேயே தேவாலயத்தில் போதகர்கள் நடுவில் அமர்ந்து உரையாடினார். கேள்விகளைக் கேட்டார். கேள்விகளுக்கு பதில் கூறினார் (லூக். 2 : 46, 47, 48) என நற்செய்தி நூல் தெரிவிக்கிறது. பவுலும் பல நேரங்களில் தர்க்க—உரையாடல் வழியாக நற்செய்தியை பிரசங்கிக்கிறார். பல விவாதங்கள் நாம் தவிர்க்க கூடியவை. தேவையற்ற விவாதங்கள் குழப்பங்களை உள்ளத்தில் உருவாக்கும். வீண் விவாதங்களில் ஈடுபடுவோரிடம் சிக்கி, அவர்களது பேச்சுக்களில் மயங்கி வேதப் புரட்டர்களாக தாங்களும் மாறியவர்கள் ஏராளம்.

திரிபுக் கொள்கைக்காரர்களைக் குறித்து மிவும் கவனமாயிருக்க வேண்டும். அவர்கள் வீடுகளில் நுழைந்து தனிமையாயிருப்போரிடம் நயமாகப் பேசி தந்திரமாக தங்கள் போதனைகளை நுழையப்பண்ணிவிடுவார்கள். இவர்கள் நிலையற்று அலைகிற நட்சத்திரங்கள், நெறி தவறியவர்கள், தங்களுக்குத் தாங்களே தண்டனைத் தீர்ப்பளித்துக் கொண்டவர்கள் (வ. 11). இவர்களுக்கு அறிவு புகட்டவும், இவர்களை திருத்தவும் கூடுமானால் முயற்சித்து விட்டு அவர்களை விட்டு விலகிவிட வேண்டும் (வ. 11) என பவுல் கூறுகிறார்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியார் எனும் திரித்துவக் கடவுளை மறுத—க்கும் எவரது உரைகளையும் கேளாதீர். உங்கள் இல்லங்களில் நுழைய இடம் கொடாதீர். ஆரோக்கியமான போதனைகளுக்காக ஜெபிப்பீர். ஆரோக்கியமான போதனைகளை கேட்க தவறாது ஆலயம் செல்வீர். ஆன்மீக போதகர்களை கடவுள் நமக்கு தந்துள்ளார். அவர்களது போதனைகளை திருமறையின் வெளிச்சத்தில் பெற்று தெளிவு பெறுவீர்.

# நன்னடத்தையில் வெளிப்படும் அறிவு

2011
**செப்டம்பர்**
10
**சனி**

காலை
யாக். 3:1–13

தி. வ.
யாக். 3 : 13

**"...ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன்.. தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்"**

மாலை
நீதி. 15:10–20

சிந்தனை
**கல்வியும், பண்பட்ட வாழ்வும் இணைந்தால் மட்டுமே பயனுடைய வாழ்வு வாழ இயலும்.**

மன்னா சேர்ப்போம்

அறிவுக்கும் புத்திக்கும் ஊற்றானவர் ஆண்டவர் (நீதி. 2 : 6). கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி. 1 : 7). கல்வியும், நன்னடத்தையும் இணைந்திருக்க வேண்டும். நன்னடத்தையற்ற அறிவு பயனற்றது. ஞானமும், அறிவாற்றலும் உடையவர் ...பணிவாலும் நன்னடத்தையாலும் அவற்றை காட்டட்டும் (யாக். 3 : 13) என்பது திருமறை.

சாலமோன் ஜெபித்தபோது கடவுள் ஞானத்தை அதிகமாகத் தந்தார் (1 இரா. 3 : 13, 28). அவரைப் போன்றவர் முன்பும் இருந்ததில்லை, பின்னரும் இருந்ததில்லை (1 இரா. 3 : 13). அந்த அளவிற்கு ஞானம் அவரிடம் நிரம்பியிருந்தது. அதை தகுதியான முறையில் வெளிப்படுத்தியபோது நீதி வென்றது. நாட்டில் அமைதி நிலவியது. நாடு வளமை பெற்றது. நெறி தவறி அதனை பயன்படுத்தியபோது அந்நிய தெய்வ வழிபாடு புகுந்தது. ஒழுக்கக் கேடு ம—ந்தது. தீமைகள் உருவாயிற்று. அவரது செல்வாக்கு மங்கிப்போயிற்று.

யூதாஸ் இயேசுவின் சீடன். அவரது போதனைகளை இயேசுவோடிருந்து கற்றவன். இயேசுவோடு வாழ்ந்தவன். இயேசுவோடு வாழ்ந்தும் இயேசுவின் போதனைகள் அவனது வாழ்வாக மாற்றம் பெறாததினால் இயேசுவைக் காட்டிக்கொடுக்கிறான்.

விண்ணி—ருந்து வரும் ஞானம் தூய்மையானது, அமைதியை விரும்பும், பொறுமை கொள்ளும். இணங்கப்போகும், இரக்கம் நிறைந்தது, நற்செயல்கள் நிறைந்தது, வெளிவேடமற்றது (யாக். 3 : 16) என திருமறை கூறுகிறது.

இயேசுகிறிஸ்து ஞானத்தின் ஊற்றாக விளங்கிய போதிலும் தன்னிஷ்டப்படி நடக்காமல் நாசரேத்தில் தன் பெற்றோருக்கு பணிந்து நடந்து கொண்டார் (லூக். 2 : 51)..

கற்றவர்கள் பலர் லஞ்சம், ஊழல், கற்புநெறி தவறிய வாழ்க்கை, கொலை, திருட்டு போன்ற குற்றங்களில் ஈடுபடுகின்றனர். இவர்கள் கற்ற கல்வி இவர்களது வாழ்வோடு ஒன்றித்திடவில்லை.

# அங்கீகரிக்கும் ஆண்டவர்

2011
செப்டம்பர்
11
ஞாயிறு

காலை
லூக். 13:10–17

தி. வ.
லூக். 13 : 12
**"...உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப் பட்டாய்"**

மாலை
ரூத் 1:1–8

சிந்தனை
**புறக்கணிக்கப் பட்டவர்களை அங்கீகரிப்பவரே நம் ஆண்டவர்.**



இயேசு கிறிஸ்து அனைவரையும் அன்பு செய்கிறார் (1 யோவா. 4 : 8). பாவிகள் மீது அதிகமாய் அன்பு கூர்ந்து அவர்களை தம்மிடம் அழைக்கிறார். துன்புறுவோரை அதிகமாய் அன்பு செய்து விடுதலை தருகிறார் (யோவா. 3 : 16).

18 ஆண்டுகளாய் பெண் ஒருவர் தீய ஆவி ஒன்றினால் பிடிக்கப்பட்டிருந்தார். அந்த தீய ஆவி அப்பெண்ணை நிமிர்ந்து நடக்க முடியாத "கூனி" ஆக மாற்றிவிட்டது. நாள் முழுதும் தரையையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். நிமிர்ந்து நிம்மதியாக ஆண்டவரை ஆராதிக்க முடியாது. விண்ணகத்துக்கு நேராக கைகளை விரித்து ஜெபிக்க முடியாது. ஆயினும் அப்பெண் "கடவுளை" ஆராதிப்பதற்காக ஜெப ஆலயம் போயிருந்தார். இது அவளுடைய துணிவையும், ஊனத்தை மேற்கொள்ளும் வ—மையையும் எடுத்துணர்த்துகிறது. இயேசு அப்பெண்ணை பாசத்தோடு அருகில் அழைக்கிறார். "அம்மா" என அழைக்கிறார். அவள் மீது கைகளை வைக்கிறார். அப்பெண் குணமடைகிறாள் (வ. 12, 13). "ஆபிரகாமின் மகள்" இவள் என அங்கீகாரமே தருகிறார். இது மாபெரும் ஆண்டவர் வழங்கும் மாபெரும் அங்கீகாரம்.

ஆசீர்வாதம் பெற வேண்டும் எனும் நல் எண்ணத்தோடு தம்மிடம் அழைத்து வரப்பட்ட குழந்தைகளை தடை செய்தோரை இயேசு கண்டித்து அவர்களை அரவணைத்து ஆசீர்வதிக்கிறார் (மாற். 10 : 15, 16).. அனைவராலும் தீட்டானவள் என முத்திரை குத்தப்பட்டு வெறுத்து ஒதுக்கி வைக்கப்பட்ட பெண் தம் ஆடையின் ஓரத்தை தொட்டபோது அப்பெண்ணை தம்முன் வரவழைத்து அங்கீகாரம் தருகிறார் (லூக். 8 : 47, 48).

இயேசு கிறிஸ்துவின் கனிவான பார்வை ஏழைகளிடமும், கைம்பெண்களிடமும், நோயுற்றோரிடமும், மருத்துவமனையி—ருப்போரிடமும், ஏன் சிறைசாலையில் கைதிகளாயிருப்போரிடமும் இருக்கிறது. ஆண்டவர் உங்களை காண்கிறார். உங்களை அங்கீகரிக்கிறார்.

# பகுத்தறிவுள்ள பெண்

**2011**
**செப்டம்பர்**
**12**
**திங்கள்**

காலை
2இரா. 4:1–14

தி. வ.
2இரா. 4 : 9
**"...நம்மிடத்தில் எப்போதும் வந்து போகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான்"**

மாலை
மாற்கு 1:1–8

சிந்தனை
**உற்று கவனித்தால் உண்மை புரியும்.**

*தீமையும், நன்மையும் பிரித்தறியப்பட வேண்டும். மனிதருக்கு நலமாய் தோன்றும் பாதைகள் ஏராளம். அவைகள் அனைத்தும் நன்மை தருவன என சொல்ல முடியாது. போ—யானவை எவை, தீமை தருவன எவை, நலமான பாதை எது என்பதை தெரிவு செய்வதற்கு பகுத்தறிவு வேண்டும். பகுத்தறியும் ஞானத்தை கடவுள் தருகிறார். சூனேம் ஊரை சார்ந்த பெண் பக்தி நிறைந்தவள். குடும்பத்தை நிர்வகிப்பதில் சிறந்தவர். பணிவிடை செய்வதில் கெட்டிக்காரியாக திகழ்ந்தாள். ஊழியக்காரர்களை நேசிக்கிற பெண்மணி.*

*எ—சா அவளுடைய ஊருக்கு வரும்போதெல்லாம். அவரை வரவேற்று, அவருக்கு உணவு கொடுத்து உபசரிப்பாள். எ—சாவும் அங்கு இளைப்பாறிச் செல்வது வழக்கம். சூனேமியாளோ எ—சாவின் வாழ்வை கூர்ந்து கவனிக்கிறவளாயிருந்தாள். அவரது திருப்பணிகளின் பரிவைக் கூர்ந்து கவளித்தாள். அவர் பரிசுத்தவான் என்பதை புரிந்து கொள்கிறாள். நம்மிடம் அடிக்கடி வரும் இந்த தீர்க்கதரிசி தேவனுடைய மனிதர் பரிசுத்தவான் எனக் காண்கிறேன் என தனது கணவரிடம் எ—சாவைக் கறித்து சாட்சிக் கொடுக்கிறாள்.*

*அபிகாயில் தன்னுடைய கணவர் தாவீதை அவமதித்தபடியால் தாவீது மிகுந்த கோபத்தில் உள்ளார் என்பதை அறிந்து சூழ்நிலையை ஆய்வு செய்து துரிதமாக செயல்படுகிறாள். ருத் தனது வாழ்வை இழந்து நின்ற சூழ்நிலையில் சூழ்நிலையை பகுத்தறிந்து நல்ல தீர்மானத்தை எடுக்கிறாள்.*

*குடும்பத்தை ஆன்மீக வழியில் நடத்திடும் மாபெரும் பொறுப்பு பெண்களிடமே உள்ளது. ஆன்மீகம், அறிவு இவையிரண்டும் இணைந்து செயல்பட வேண்டும். சரியான போதனை, நேர்மையான ஊழியர்கள், சரியான ஊழியங்களை அடையாளம் கண்டிட வேண்டும். திருமறை சார்ந்து ஆன்மீக வழி நாடும் இல்லறம் இனியது. சரியான ஆன்மீக பாதையை தெரிவு செய்ய பகுத்தறிவுடன் இறை ஞானமும் இணைந்து செயல்பட்டால் மகிழ்ச்சி அதன் பலன்.*

# உபதேசம் கேட்கும் பெண்

**2011**
**செப்டம்பர்**
**13**
**செவ்வாய்**

காலை
அப். 16:1–15

தி. வ.
அப். 16 : 14
**"...பவுல் சொல்–யவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்"**

மாலை
ரூத். 2:1–7

சிந்தனை
**கிறிஸ்தவ உபதேசத்துக்கு அடைந்த உள்ளமும் திறக்கும்.**

பெண்கள், ஆண்கள் எவராக இருந்தாலும் குடும்ப வாழ்வை சரியாக நடத்திட வலுவான ஆன்மீகம் அவசியம். வாழ்வில் நெருக்கடி நேரிடும் தருணங்களில் கற்றுக்கொண்ட திருமறை வசனங்களும், உபதேசங்களும் உதவும்.

பவுல் அப்போஸ்தலர் பி—ப்பி பட்டணத்தில் தங்கியிருந்தபோது ஓய்வு நாள்களில் ஆற்றுப்பக்கம் செல்வது வழக்கம். அங்கு அநேகம் பெண்கள் கூடி வருவர். கூடி வரும் பெண்களுக்கு இயேசுவைப் பற்றி கூறுவது வழக்கம். இந்த நல்ல உபதேசங்களைக் கேட்டவர்களில் ஒருவர் லீதியாள் எனும் பெண்மணி ஆவார். இவர் மிகுந்த ஆர்வமாய் பவுல் கூறும் உபதேசங்களை கேட்டார். கர்த்தர் அவள் இருதயத்தை திறந்தாள் (வ. 14).

லாசரு, மார்த்தாளுடைய சகோதரி மரியாள் இயேசுவின் பாதத்தினருகே உட்கார்ந்து அருள் வசனங்களை இயேசு போதிக்கையில் கேட்டுக் கொண்டிருந்தாள். இயேசு அவளை "நல்ல பங்கை தெரிந்து கொண்டவள்" என புகழுகிறார் (லூக். 10 : 42). இயேசு சென்ற இடமெல்லாம் ஆண்களும், பெண்களும் அவரது உபதேசத்தை கேட்கக் கூடினர்.

இயேசு வசனங்களின் மாட்சியை புகழ்ந்து கூறும்போது "அப்பத்தினாலே மாத்திரமல்ல—தேவனுடைய வார்த்தையினாலும் பிழைப்பான்" (லூக். 4 : 4) என இயேசு கூறுகிறார். ஆதித் திருச்சபை கிறிஸ்தவர்கள் "அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரித்திருந்தார்கள்" (அப். 2 : 42).

லீதியாள் தான் உபதேசம் கேட்டதுமன்றி தன்னுடைய இல்லத்தையே மக்கள் கூடி உபதேசம் கேட்கும் இடமாக மாற்றி விட்டாள். லீதியாளின் திறந்த உள்ளம் போன்று நமது கடவுளின் வார்த்தைகளை கேட்க நமது உள்ளம் திறக்கட்டும். கேட்க மட்டுமல்ல மற்றவர்களுக்கு அறிவிக்கவும் நமது இல்லத்தை திறக்கவும் முன்வருவோம்.

2011
**செப்டம்பர்**
14
**புதன்**

காலை
லூக். 2:21–40

தி. வ.
லூக். 2 : 38
**"...கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்"**

மாலை
ரூத். 2:8–18

சிந்தனை
**கர்த்தருக்கு காத்திருப்போர் உயரத்தில் பறப்பர்.**

# காத்திருந்த பெண்

காத்திருத்தல் மிக தேவையான ஒன்று. அவசரப்படுதல் ஆபத்தைத் தரும். ஆனால் காத்திருத்தல் நிதானத்தை தரும். இறைவனுக்காக காத்திருத்தல் மகிழ்ச்சியும், ஆசீர்வாதத்தையும் தரும்.

இறைமகன் இயேசுகிறிஸ்து பிறந்த பின்னர் தேவாலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். நீதியும் இறைபக்தியும் உள்ளவராகவும், இஸ்ரவே—ன் அமைதி வர காத்திருக்கின்றவராகவும், தூய ஆவியாரின் அருட்கொடைகள் நிறைந்தவராகவும் காணப்பட்ட சிமியோன் என்ற வயது முதிர்ந்தவர் இறைவனின் உந்துதலால் ஆலயத்திற்கு வந்திருந்தார். இந்த முதியவர் குழந்தை இயேசுவை கரங்களில் ஏந்தி இறைவனை போற்றி உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது என்றார் (லூக். 2 : 32).

இந்நேரத்தில் ஆசேருடைய கோத்திரத்தைச் சேர்ந்த பானுவேல் என்பவரின் மகளாகிய அன்னாள் என்ற இறைவாக்கினரும் அங்கு ஆலயத்தில் இருந்தார். இவர் இளம் வயதிலேயே தம் கணவரை இழந்தவர். சுமார் எண்பத்து நான்கு வயது உடையவராக இருந்தார். இவர் இரவும் பகலும் உபவாசித்து வேண்டுதல் செய்து, இறைவனைத் தொழுது கொண்டு, ஆலயத்தை விட்டு நீங்காதவராக இறைவனுக்காக காத்திருந்தார். எருசலேமில் மீட்பு உண்டாக வேண்டும் என்று காத்திருந்த அனைத்து மக்களுக்கும் குழந்தை இயேசுவின் சிறப்பு குறித்து அறிவித்தார்.

இன்றையச் சூழ—ல் இறை ஆலயத்தில் சென்று இறைவனைத் தொழுது கொள்ளுகின்ற, இறைவனுக்கு காத்திருக்கின்ற நிலைகள் நம்மிடையே குறைந்து காணப்படுகின்ற அவல நிலை காணப்படுகின்றது. நாம் இறைவனுக்கு காத்திருக்க வேண்டும் என்று இக்காலைப் பொழுதில் தீர்மானம் செய்து முன்னேறுவோம்.

"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் (ஏசா. 40:31).

# ஆண்டவருக்கு அஞ்சிய பெண்கள்

2011
**செப்டம்பர்**
15
**வியாழன்**

காலை
யாத். 1:15–22

தி. வ.
யாத். 1 : 21
**"மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்ததினால், அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார்"**

மாலை
மாற். 1:40–45

சிந்தனை
**இறைவனுக்கு அஞ்சுகின்ற வாழ்வே உயர்வைத் தரும்.**

ஆண்டருக்கு அஞ்சுவது ஞானத்தைத் தருகிறது. ஆண்டவருக்கு அஞ்சுவது இறை ஆசியை தரும், உயர்வை தரும்.

இஸ்ரவேலர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்து அடிமைப்பணிச் செய்துவந்தார்கள். இச்சூழ—ல் மிகவும் ஒடுக்கப்பட்டார்கள். எனினும் பலுகி பெருகினார்கள். இதனால் இஸ்ரவேல் மக்கள் மீது எகிப்தியருக்கு எரிச்சல் உருவாகியது. பயம் உருவாகியது. ஒருவேளை நம் அரசாட்சிக்கு இடையூறு வந்துவிடுமோ என்கிற அச்சம் ஏற்பட்டது. இதனால் மருத்துவச்சிகளாகப் பணிச்செய்த சிப்பிராள், பூவாள் என்பவர்களிடம் எகிப்தின் அரசர் எபிரேய பெண்களுக்கு பிரசவ நேரத்தில் மருத்துவம் பார்க்கும்போது ஆண் பிள்ளைகளாக இருந்தால் கொன்று போடுங்கள் பெண் பிள்ளைகளாக இருந்தால் விட்டுவிடுங்கள் என்று கட்டளை பிறப்பித்தார்.

ஆனால் எபிரேய மருத்துவச்சிகள் இறைவனுக்கு அஞ்சிய வாழ்வு வாழ்ந்தபடியினால் எகிப்திய அரசரின் கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. ஆண் குழந்தைகளையும் உயிருடன் விட்டுவிட்டனர். மருத்துவச்சிகள் மன்னனைவிட கடவுளை முக்கியப்படுத்தினார்கள். இஸ்ரவேலர் கடவுளின் மக்கள் என்பதை நம்பினர். கடவுளின் கரம் இஸ்ரவேலருடன் இருப்பதையும் உணர்ந்தனர். இதனால் இறைவன் இந்த மருத்துவச்சிகளுக்கு நன்மைச் செய்தார். அவர்கள் குடும்பங்களையும் தழைக்கச் செய்தார்.

இறைவனுக்கு அஞ்சுகின்ற வாழ்வு நம்மையும், நம் குடும்பத்தையும் சமுதாயத்தையும், நம் திருச்சபையையும் தழைக்கச் செய்கின்றது. இக்காலைப் பொழுதில் நம்முடைய வாழ்வை ஆராய்ந்து பார்த்து சங்கீதக்காரனைப்போல் வேதனை உண்டாக்கும் வழிகள் என்னிடத்தில் உண்டோ என்று ஆராய்ந்து பார்த்து இறைவனிடம் நம்மை அர்ப்பணித்து இறைவனுக்கு அஞ்சிய வாழ்வு வாழ முற்படுவோம். எபிரேய மருத்துவச்சிகளின் குடும்பத்தை தழைக்கச் செய்த, வளரச் செய்த இறைவன் நம் வாழ்வை, குடும்பத்தை, நம் சமுதாயத்தை வளரச் செய்வார்

2011
செப்டம்பர்
16
வெள்ளி

காலை
நீதி. 31:10–31

தி. வ.
நீதி. 31 : 20
**"சிறுமையானவர் களுக்குத் தன் கையைத் திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள் "**

மாலை
1பேது. 3:1–9

சிந்தனை
**கரிசனை வாழ்வால் புத்தியுள்ளவர்கள், குணசா—கள் ஆகலாம்.**

மன்னா சேர்ப்போம்

# கரிசனையுள்ள பெண்

கரிசனையுள்ள வாழ்வை பிறர் மெச்சுகின்றார்கள். கரிசனை உண்டானால் வாழ்வு உண்டு. பிறர் மீது கரிசனைக் கொண்டால் நமக்கும் பிறருக்கும் மகிழ்ச்சியுண்டு. நிறைவு உண்டு.

தாவீதின் மகனாகிய சாலொமோன் தனது நீதி மொழிகளில் சொல்லும்போது கரிசனையுள்ள பெண்களைக் குறித்து அழகாக கூறுகின்றார். கரிசனையுள்ள பெண் குணசா—யான பெண்ணாக முத்துக்களைவிட உயர்ந்த மதிப்புடையவராக போற்றப்படுகின்றார்.

அதாவது கரிசனையுள்ள வாழ்வால் பெண்ணின் கணவர் அவளை நம்புவார். உற்சாகமாக வேலைச் செய்கின்றார். அவள் அதிகாலையில் எழுந்து தன்னுடைய இல்லத்தாருக்கு கரிசனையோடு உணவு பரிமாறுகின்றார். வேலைக்காரிகள் மீது கரிசனைக் கொண்டு அவர்களுக்கு வழங்க வேண்டியவைகளை கொடுக்கின்றாள். ஏழை எளியவர்களை உபசரிக்கின்றாள். தானதர்மங்கள் செய்வதிலே சிறந்து விளங்குகின்றாள். அவளே புத்தியுள்ள பெண் என திருமறை சித்தரிக்கின்றது.

அன்பர்களே! நம் வாழ்வு எப்படி? கரிசனையுள்ள வாழ்வு உண்டா? சிந்தித்து பார்க்க கடமைப்பட்டுள்ளோம்.

அன்னை தெரசா, ஏமி கார் மைக்கேல் அம்மையார், டாக்டர். ஐடாஸ்கடர் போன்ற பெண்களின் கரிசனையுள்ள வாழ்வைச் சான்றாகக் கொள்வோம். அவர்கள் ஏழைகள் மீது, ஏழைக் குழந்தைகள் மீது ஆதரவற்றவர்கள் மீது கரிசனைக் கொண்டு தங்கள் வாழ்வு முழுவதும் அதற்காகவே அர்ப்பணித்தவர்கள். இதேப் போன்ற கரிசனை வாழ்வு நமக்கு தேவை.

இன்று தனது கணவர் தனது பிள்ளைகள் குடும்பம் மீது கரிசனை காட்டாத சூழல்கள் பெருகிவரும் காலக்கட்டங்களில் கரிசனை கரைந்து போய் கொண்டிருக்கும் இந்நாட்களில் நமது நிலைப்பாடு என்ன என்பதனை இக்காலைப் பொழுதில் ஆய்ந்து பார்த்து, கரிசனை வாழ்வு குறைந்திருந்தால் இறைவனிடம் மன்னிப்பு கோரி பிறர் மீதும் குடும்பத்தின் மீது கரிசனையுணர்வுடன் கரிசனைக் காட்டி முன்னேறிச் செல்வோம்.

# புரிந்துகொள்ளும் பெண்

**2011**
**செப்டம்பர்**
**17**
**சனி**

காலை
யாத். 2:1–10

தி. வ.
யாத். 2 : 9
**"...நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டு போய், அதை எனக்கு வளர்த்திடு"**

மாலை
ரோம. 14:13–19

சிந்தனை
**சரியான புரிந்து கொள்ளுதல் உறவுகளை வளப்படுத்துகிறது.**

*புரிந்து கொள்ளுதல் சிறப்பு வாய்ந்தது. பிறரை புரிந்து கொண்டு மதித்து நடப்பது நல்ல காரியங்களைச் செய்கின்றது. புது உறவை மலரச் செய்கிறது.*

லேவியின் குடும்பத்தில் ஒரு தம்பதியருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை அழகுள்ளதாக இருந்தது. பிறக்கும் ஆண் குழந்தைகளை கொலைச் செய்ய வேண்டும் என்பது எகிப்திய மன்னரின் கட்டளை. இச்சூழ—ல் பிறந்த இந்த அழகிய ஆண் குழந்தையை இழக்க கொடுக்க மனதற்ற இந்த தம்பதியினர் மறைத்து வைத்து வளர்க்கின்றார்கள். மூன்று மாதத்திற்கு மேல் மறைத்து வைத்து வளர்ப்பது கடினம் என்று கண்டுகொண்ட இத்தம்பதியினர் நாணற் பெட்டியில் பிசின் கீல் பூசி அதிலே பிள்ளையை வைத்து ஆற்றில் விட்டுவிட்டார்கள். அடுத்து என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க அக்குழந்தையின் அக்கா பார்த்துக் கொண்டிருந்தார். எகிப்திய அரசரின் மகள் குளிக்க வந்தபோது அவர் கண்களில் இப்பெட்டி பட்டது. பெட்டியைத் திறந்து பார்த்தபோது குழந்தை அழுகிறதைக் கண்டார். அவர் அந்த குழந்தையின் மீது இரக்கப்பட்டு கொண்டிருக்கின்ற தருணத்தையும், அந்த இளவரசி நினைப்பதையும் புரிந்து கொண்ட இந்த குழந்தையின் அக்கா ஓடிச்சென்று இந்த குழந்தைக்கு பால் கொடுக்கிற ஒரு பெண்மணியை அழைத்து வரட்டுமா (யாத். 2 : 7) என்று கேட்கிறாள்.

புரிந்து கொண்ட இந்த அக்காவின் செயல்பாட்டால் அக்குழந்தை தன் பெற்றோரிடம் வளரும் பாக்கியம் பெறுகிறது. இறைத்திட்டம் நிறைவேற ஊன்றுகோலாக இருந்தது.

அன்பர்களே! நம் வாழ்வில் புரிந்து கொள்ளுகின்ற தன்மை உண்டா? என்பதை இக்காலைப்பொழுதில் சிந்தித்துப் பார்ப்போம். பிறரைப் புரிந்து கொண்டு, குடும்பத்தைப் புரிந்துகொண்டு நாம் என்னச் செய்யவேண்டும் என்பதை சிந்தித்து நிதானித்து புரிந்து கொண்டு செயல்பட முயற்சி செய்வோம். அவ்விதமாக வாழும்போது இறை ஆசி நமக்கு உண்டு.

# நற்செய்தியும் சமய பன்மையும்

**2011**
**செப்டம்பர்**
**18**
**ஞாயிறு**

காலை
அப். 17:16–31

தி. வ.
அப். 17 : 23
**"...நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்"**

மாலை
சங். 67

சிந்தனை
**நற்செய்தி அறிவிக்க சூழல் தடை அல்ல.**

மன்னா சேர்ப்போம்

தூய பவுலடியார் அத்தேனே பட்டணத்தி—ருக்கையில் அந்தப் பட்டணமானது சிலைகளினால் நிறைந்திருப்பதைக் கண்டார். மிகுந்த வைராக்கியமடைந்தவராக ஜெப ஆலயத்தில் யூதர்களோடும், பக்தியுடையவர்களோடும், சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினமும் வாக்குவாதம் பண்ணினார். அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமாகிய ஞானியரில் சிலர் பவுலுடனே வாக்குவாதம் பண்ணினார்கள். பவுலார் நற்செய்தியாகிய இயேசுகிறிஸ்துவையும் அவரின் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்கு அறிவித்து வந்தார்.

பின்னர் மார்ஸ் மேடைக்கு பவுலை அழைத்து வந்து நீர் சொல்லுகிற புதிய உபதேசம் என்ன என்று நாங்கள் அறிய வேண்டும் என்றனர். பவுலடியார் மார்ஸ் மேடையில் நின்று அத்தேனே பட்டணத்து மக்களைப்பார்த்து நீங்கள் மிகுந்த இறைபக்தி உள்ளவர்கள் என்றுக் காண்கின்றேன். உங்கள் ஆராதனைக்குரியவைகளை கவனித்தபோது "அறியப்படாத இறைவனுக்கு" என்று எழுதியிருக்கிற ப—பீடம் ஒன்றைக் கண்டேன். நீங்கள் அறியாமல் தொழுதுகொள்ளுகின்ற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் உருவாக்கின இறைவன் விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவராய் இருக்கின்றபடியினால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் தங்குவதில்லை. மனிதர்கள் கைகளினால் பணிவிடை ஏற்பதுமில்லை. அவருக்குள் நாம் பிழைத்திருக்கிறோம். அசைகின்றோம், அமர்கின்றோம். நாம் இறைவனின் வழித் தோன்றல்களாயிருக்க மனுஷர்களின் கைவேலைப்பாடுகளினாலும், அறிவினாலும் உருவாக்கிய பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு இறைவன் ஒப்பரியிருப்பார் என்று நாம் நினைத்தல் தவறு. அறியாமையின் காலங்களை இறைவன் காணாதவர் போ—ருந்தார். ஆனால் இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டும் என்று எல்லா மனிதர்க்கும் கட்டளையிடுகின்றார் என்று நற்செய்தியை மனத்திடத்துடன் அறிவிக்கின்றார். சிலர் இறைவன் மீது நம்பிக்கைக் கொண்டார்கள்.

நாம் நம் வாழ்விலும் நற்செய்தி அறிவித்தல் சிறப்புடையது. பல சமய மக்கள் வாழ்கின்ற சூழ—ல் பவுலார் திடமனதுடன் நற்செய்தி

# அமைதியின் கருவியாவோம்

2011
**செப்டம்பர்**
19
**திங்கள்**

காலை
எபி. 12:1–14

தி. வ.
எபி. 12 : 14
**"யாவரோடும் சமாதானமாயிருக் கவும், பரிசுத்த முள்ளவர்களா யிருக்கவும் நாடுங்கள்"**

மாலை
பிர. 1:1–11

சிந்தனை
**அமைதி வேண்டும் என்று பேசுவதை அல்ல, அமைதியின் கருவிகளாவதையே இறைவன் விரும்புகின்றார்**



அமைதியை விரும்பாதவர் எவரும் இலர். ஒருவரோடொருவர் அமைதி ஏற்படுத்துவது கிறிஸ்தவரின் கடமை. அமைதியற்ற சூழ—ல் அமைதியைத் தருபவர் இறைவன். இன்றைய காலத்தில் அமைதியற்ற, வன்முறை பெருக்கம் போன்ற சூழல்கள் பெருகிவருகின்றன. எங்கு யாரைப் பார்த்தாலும் வாழ்வில் சமாதானம், சந்தோஷம், நிறைவு இல்லாத நிலையே பெருகி வருகின்றது.

இறைமகன் இயேசுகிறிஸ்து அமைதியுள்ள வன்முறையற்ற ஏற்றத்தாழ்வுகள் அற்ற ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க விரும்பினார்.

எபிரேயர் ஆக்கியோன் சொல்லும்போது அனைவருடனும் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லுகின்றார் (எபி. 12 : 14). ரோமர் 12—ம் அதிகாரத்தில் படித்து பார்க்கும்போது அமைதியை குலைக்கின்ற தீயச் சக்திகளை களைய வேண்டும் என்று பவுலடிகளார் ரோமாபுரி திருச்சபைக்கு எழுதுகின்றார். ஒருவருடன் ஒருவர் ஏகசிந்தை உடையவராக இருங்கள் (ரோமர் 12 : 16) ஒருவருக்கும் தீமைக்கு தீமை செய்யாதிருங்கள் (ரோமர் 12 : 17) முடிந்தால் உங்களால் இயன்ற அளவிற்கு எல்லா மனிதர்களோடும் அமைதியாய் (சமாதானமாய்) இருங்கள் (ரோமர் 12 : 18) என்று பவுல் கூறுகின்றார்.

இன்று நாம் அனைவரும் அமைதியாக வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். உலகில் அமைதி நிலவ வேண்டும். சண்டைகள், வன்முறைகள் போன்றவை ஒழிய வேண்டும் என்று விரும்புகின்றோம். ஆனால் நாம் ஒதுங்கி ஒளித்துக் கொள்ளுகின்றோம். சிலவேளைகளில் நாமும் அமைதியை சீர்குலைக்கின்ற காரணியாக மாறிவிடுகின்றோம். ஆனால் நாம் அமைதியை சீர் குலைக்கிக்ற காரணிகளாக அல்ல அமைதியை ஏற்படுத்துகின்ற கருவிகளாக மாற வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றார். நாம் அமைதிக்கு குந்தகம் விளைவித்து கொண்டிருப்போமானால் இன்றே இப்பொழுதே மனம் வருந்தி இறைவனிடம் வேண்டுதல் செய்து அமைதியின் கருவிகளாக மாறி இறையாசி பெறுவோம்.

# ஆன்மீக சான்றாவோம்

2011
செப்டம்பர்
20
செவ்வாய்

காலை
ரோ. 15:1–6

தி. வ.
ரோம. 15 : 2
**"ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக் கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன்"**

மாலை
பிர. 1:12–18

சிந்தனை
**என்னில் பிறர் கிறிஸ்துவை காணவேண்டும்.**



உயிர்த்தெழுந்த கிறிஸ்து நாதர் உலகுக்குத் தந்த உன்னதமான அன்புக் கட்டளை எனக்குச் சான்றாகுங்கள் என்பதாகும். இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, பணி, துன்பம், சாவு, உயிர்ப்பு போன்றவைகளுக்கு வாழ்வில் வடிவம் தருவோரே உண்மையான கிறிஸ்தவர்களாவர்.

உரோமைப் பேரரசின் தலைநகராக ரோம் விளங்கியது. பல நாடுகளி—ருந்தும் கிறிஸ்தவர்கள் அங்கு போய்க் குடியேறினர். இதனால் உரோமைத் திருச்சபை வளர்ச்சியுற்றது. உரோமையில் யூதக் கிறிஸ்தவர்களும் பிற இனத்துக் கிறிஸ்தவர்களும் இருந்ததை மனதில் கொண்டு சபையார் அனைவரும் அன்புடனும், கிறிஸ்தவ நெறியுடனும் வாழ்ந்து இறைவனுக்குச் சான்றாக விளங்க வேண்டும். கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் புதுவாழ்வு வாழ்வோர் திருச்சபைக்கு மாதிரியாகத் திகழ வேண்டும் என்பதையும் வ—யுறுத்துகிறார்.

கடவுளுக்குச் சான்றாக வாழ்வதற்கு இயேசு கிறிஸ்துவின் வாழ்வும் போதனைகளும் நமக்கு வழிகாட்டுகின்றன. இயேசு கிறிஸ்துவின் சிந்தையே நம்மிலும் இருக்க வேண்டும். கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை தொடர்ந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு தம்மைத் தாழ்த்தினார். ஏனெனில் இயேசுகிறிஸ்து தம்மைச் சார்ந்தவற்றில் அல்ல பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொண்டிருந்தார். மனுமக்களின் மீட்புக்காகவும், வாழ்வுக்காகவும் தம்மையே தியாகம் செய்தார்.

கடவுளின் மக்களாய் வாழ அழைக்கப்பட்டிருக்கிற நாமும் நமக்கு உகந்ததைத் தேடாமல் அடுத்தவருடைய நன்மைக்காகவும், வளர்ச்சிக்காகவும் செயல்பட்டு அவர்களுக்கு உகந்தவர்களாக வாழ வேண்டும். அதுவே உண்மையான சான்றுள்ள வாழ்வாகும். கிறிஸ்து இயேசுவின் முன்மாதிரிக்கேற்ப நாம் ஒரே மனத்தினராய் இருக்குமாறு மன உறுதியையும், ஊக்கத்தையும் கடவுள் நமக்குத் தருவாராக!

# அனைவரையும் ஏற்போம்

2011

**செப்டம்பர்**

21

**புதன்**

**தூய மத்தேயுவின் திருநாள்**

காலை

ரோ. 15:7–12

தி. வ.

ரோ. 15 : 7

**“. . . கிறிஸ்து நம்மை ஏற்றுக் கொண்டதுபோல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள் ளுங்கள்”**

மாலை

பிர. 2:1–14

சிந்தனை

**நம்மை போன்றவர்களே மற்றோரும்.**

இரண்டு கால்களும் முடமான ஒரு இளைஞர் சாலை ஒன்றில் அமர்ந்து பிச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார். அந்த வழியே வந்த பெரியவர் ஒருவர் அந்த இளைஞரை கவனியாது அவன் வைத்திருந்த பாத்திரத்தை மிதித்து விட்டார். அப்பொழுது அதில் இருந்த சில்லறை காசுகள் சிதறியோடியது. தவறுதலாக நடந்து விட்ட இந்த செயலுக்காக பெரியவர், இளைஞரிடம் தம்பி என்னை மன்னித்துக்கொள் என்றார். இளைஞர் பெரியவரின் கரங்களை பிடித்து அழுதான். பெரியவர் வருத்தம் அடைந்து அந்த இளைஞரிடம் தம்பி அழாதே, சிதறிய அனைத்து காசுகளையும் நான் எடுத்து தந்து விடுகிறேன் என்றார். உடனே அந்த இளைஞர் ஐயா காசு சிதறியதற்காக நான் அழவில்லை நீங்கள் என்னை தம்பி என்று அழைத்ததால் என் உள்ளத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியால் வந்த ஆனந்த கண்ணீர். என்னை எல்லோரும் பரிதாபத்தோடு பார்ப்பார்கள். நீங்கள் என்னை தம்பி என்று அழைத்தது இந்த காசுகள் எல்லாவற்யையும் விட மேலானது என கூறினான்.

அப்போஸ்தலர் பவுல் கூறும்போது கிறிஸ்து நம்மை ஏற்றக்கொண்டது போல நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள் என்கிறார். ஆரம்பகால திருச்சபையில் யூதர்கள், பிற இனத்தார் என்கின்ற பிரிவு இருந்தமையால், ஒருவரையொருவர் ஏற்றக்கொள்ளாத மனநிலை இருந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு 8 நூற்றாண்டுகளுக்கு முன்னே அவரை பற்றி ஏசாயா உரைத்த தீர்க்கதரிசனத்தில், புறஜாதியாரை ஆளும்படிக்கு எழும்புகிறவராகிய ஒருவர் தோன்றுவார் அவரிடத்தில் புறஜாதிகள் நம்பிக்கை வைப்பார்கள் என்றும், கிறிஸ்து அனைவரையும் மீட்கும் படியாக, ஏற்றுக்கொள்ளும்படியாக உலகத்தில் தோன்றுவார் என்பதையும் கூறுகின்றார்.

இயேசுகிறிஸ்துவில் யூதரும், புற இனத்தவரும், உயர்ந்தவரும், தாழ்ந்தவரும், ஆணும், பெண்ணும், பலம் உள்ளவரும், பலன் அற்றவரும், அதிகாரம் உள்ளவரும், அடிமையாய் இருப்போரும் ஒன்றே. கிறிஸ்துவை பின்பற்றும் நாமும் அனைவரையும் ஏற்றுக்கொண்டு வாழ்வோம்.

2011
**செப்டம்பர்**
22
**வியாழன்**

காலை

ரோ. 15:13–19

தி. வ.
ரோ. 15 : 14

**“நீங்கள் நற்குணத்தினால் நிறைந்தவர்களும், .. புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று ... நிச்சயித்திருக்கிறேன்”**

மாலை

பிர. 2:15–26

சிந்தனை

**பிறரை திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்வது நற்பண்பு, நற்குணம்.**



# அருங்குணமுடையவராவோம்

*மனிதர்கள் நற்குணங்கள் உடையவர்களாக வாழ்வது சிறப்பு. ஒருவருக்கொருவர் ஒருமனதுடன், திறந்த மனதுடன், விட்டுக்கொடுத்து வாழ்வோர் அருங்குணம் படைத்தோராவார்.*

*தூய பவுலடிகளார் உரோமைத் திருச்சபை மக்களுக்கு எழுதிய மட—ல் அருங்குணங்கள் படைத்தோராக வாழ்த—ன் சிறப்பை எடுத்துரைக்கின்றார். இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைக் கடைபிடித்து ஒரே மனதை உடையவர்களாய் மன உறுதியை, ஊக்கத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். (ரோமர் 15 : 5). இயேசுகிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல நாமும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளவேண்டும். (ரோமர் 15 : 7) என்கிறார்.*

*பாவங்கள் பல புரிந்து, கீழ்ப்படியாமல் இறை விருப்புக்கு மாறாக நடந்து பாவிகளாக மாறிவிட்ட நம்மையும் தம்முடைய பிள்ளைகளாக, பாவிகளாக அல்ல மீட்பு பெற்றவர்களாக ஏற்றுக்கொண்டார். நம் குற்றங்களை மன்னித்து மறந்தார். அது போல நாமும் பிறர் குற்றங்கள் குறைகளை மன்னித்து மறந்து அவர்களை ஏற்றக்கொள்ள வேண்டும் என்பதையும் அதன் மூலம் நற்குணங்களைப் பெற்றவர்களாக மாறலாம் என்பதையும் தெளிவுபடுத்துகிறது.*

*இன்று நாம் உயர்ந்தவர்கள், இந்த உலகத்தில் வாழவேண்டியவர்கள் அல்ல, மேலோகத்தில் வாழப் பிறந்தவர்கள், என்கின்ற நோக்கில் பிறர் நலன் நோக்காது, சகோதர பாசம் இன்றி, பிறருக்கு உதவி செய்ய மனமற்றவர்களாக ஏழை எளியவர்களை நம்மைப்போல் ஏற்றுக்கொள்ள மனமற்றவர்களாக செயல்படுகின்ற தருணங்கள் உண்டு. இவைகளை நாம் ஒவ்வொன்றாக இறை சமூகத்தில் எண்ணிப் பார்ப்போம். இக்காலைப்பொழுதில் நம்மை நாம் ஆய்ந்து பார்த்து நம்மை இறைவனிடம் அர்ப்பணித்து இயேசுகிறிஸ்து நம்மை ஏற்றக்கொண்டதைப் போல பிறரையும் ஏற்றுக்கொண்டு அருங்குணங்கள் அனைத்தையும் பெற்றவர்களாக முன்னேறிச் செல்வோம். இறை*

# அருட்பணி புரிவோம்

2011
**செப்டம்பர்**
23
**வெள்ளி**

காலை
ரோ. 15:20–25

தி. வ.
ரோ. 15 : 21
**"கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்"**

மாலை
பிர. 3:1–13

சிந்தனை
**நற்செய்தி அறிவித்தல் நம்மீது விழுந்த கடமை.**

மன்னா சேர்ப்போம்

நாம் வாழும் இந்த உலகிலும் நமக்கு மிகவும் அருகிலும் இன்னும் இயேசுகிறிஸ்துவை அறியாத ஏராளமான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் ஆண்டவரை அறிந்து கொண்டு அவரது மீட்பினை பெற வேண்டும்.

அருட்பணிபுரிவதிலே அன்றும் இன்றும் நமக்கு முன் மாதிரியாக இருப்பவர் புனித பவுல் அவர்கள். அவரது அருட்பணி தாகத்தை அவர் எழுதிய அனைத்து நிருபங்களிலும் பார்க்க முடிகிறது. ரோமபுரியாருக்கு எழுதிய கடிதத்திலும் கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்க விரைகிறேன் என்கிறார். அதுபோல் சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ . அதாவது எனக்கு பெரும் கேடு என்கிறார் 1கொரி. 9 : 16—ல் சாலை வசதி மற்றும் போக்குவரத்துக்கான நல்ல சூழல்கள் இல்லாத நிலையிலும் கடல்பயணமாகவும் கால் நடையாகவும் கடினமாக உழைத்து நற்செய்தியை அன்று பரப்பியவர் பவுல் அடிகளார். இன்றைய அருட்பணிக்கு அவர் ஒரு முன் உதாரணமாக இருக்கிறார். கிராமங்கள் தோறும் சுற்றித்திரிந்து நற்செய்தி கூறிய இறைமகன் இயேசுவின் அடிச்சுவட்டை பின் பற்றி பணிபுரிந்த தூய பவுல் போல் நாமும் அருட்பணிபுரிவோம்.

ஐரோப்பா கண்டத்தி—ருந்து ஆப்பிரிக்கா கண்டம் சென்று அங்குள்ள காட்டுமிராண்டி போன்ற மக்களுக்கு அருட்பணி செய்து அவர்கள் வாழ்வை மாற்றிய டேவிட் —விங்ஸ்டன் இறந்து அடக்கம் செய்யப்பட்ட இடம் இங்கிலாந்து நாட்டின் அரசர்களின் கல்லறை அருகே. அருட்பணி புரிவோரை ஆண்டவர் ஆசீர்வதித்து உயர்த்துவார். நம்முடைய D.M.P.B. -யின் அருட்பணியாளர்களை தாங்கும் சாலைகள் பெருகிக்கொண்டே இருப்பது நமக்கு மிகுந்த மகிழ்வை தருகிறது. நாமும் ஜெபிப்போம், கொடுப்போம், உழைப்போம். அத்துடன் ஆண்டவரை அறியாதோருக்கு நற்செய்தியை

2011

**செப்டம்பர்**

24

**சனி**

காலை

யோபு 4:1–4

தி. வ.

யோபு 4 : 3

**“இதோ, நீர் அநேகருக்குப் புத்தி சொல்–, இளைத்த கைகளைத் திடப்படுத்தினீர்”**

மாலை

ரோ. 15:26–33

சிந்தனை

**ஆக்கபூர்வமான அறிவுரை பிறரை அழிவினின்று காக்கும்.**



# அறிவுரை வழங்குவோம்

ஊத்ஸ் என்னும் தேசத்திலே வாழ்ந்த யோபு கடவுளுக்கு பயந்து வாழ்ந்த உத்தமர் பெரும் செல்வந்தர் ஆன இவரை சாத்தான் சோதித்ததினால் எல்லாவற்றையும் இழந்து வாடினார். இதையறிந்த அவரது நண்பர்கள் மூவர் ஆறுதல் சொல்வதற்காக வந்தார்கள். யோபு—வை பார்த்தபோது அவர் உருமாறி மிகவும் பரிதாபத்திற்குரியவராக காணப்பட்டார். அத்துடன் தன் வேதனைகளை எல்லாம் நண்பர்களிடம் வெளிப்படுத்தினார். அப்போது தான் எ—ப்பாஸ் என்பவர் இதோ நீர் அனேகருக்கு புத்தி சொல்— இளைத்த கைகளை திடப்படுத்தினீர் என்கிறார்.

மிகவும் நல்லவர்களாக வாழ்வதும் மறற்வர்களுக்கு அறிவுரை வழங்குவதும் மிகவும் நல்ல செயலாகும் மனித வாழ்விலே பல்வேறு பிரச்சனைகளைச் சந்தித்து சோர்ந்து தளர்ந்து போகும் போது அன்பானவர்களின் அறிவுரையும், ஆதரவும் ரொம்பவும் பயனுள்ளதாக அமைந்து விடுகிறது சரியான அறிவுரை வழங்கப்படாத காரணத்தினால் நம்மிலே அனேகர் கண்போன போக்கில் கால் போகும் நிலையில் சென்று கெட்டு அழிகிறார்கள் ஆகையால் நெறி தவறி நடப்போர்கு அறிவுரை வழங்குவது மிகவும் அவசியம் சில காரியங்களில் சரியான தெளிவான முடிவு எடுக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருப்பவரும் உண்டு அப்படிப்பட்டோருக்கு நல் ஆலோசனையுடன் அறிவுரை வழங்கப்பட வேண்டும்.

சாலோமன் ஞானியின் அனுபவம் மிக்க அறிவுரைகள் நீதிமொழிகள் மற்றும் பிரசங்கி ஆகிய நூல்களில் வழங்கப்பட்டுள்ளன. அவைகள் என்றும் உலக மக்களுக்கு மிக நல்ல அறிவுரைகளாகவே திகழுகின்றன. அறிஞர்கள், ஞானிகள் மற்றும் நல்லோரின் ஆலோசனைகள் நமக்கு மிகவும் அவசியம் நாமும் ஆக்கப்பூர்வமான நல்ல காரியங்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்குவோம். நல்ல அறிவுரைகளை நாமும் ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்ந்து முன்னேறுவோம்.

# முதியோரை ஏற்றுக்கொள்ளுதல்

2011
செப்டம்பர்
25
ஞாயிறு

**முதியோர் ஞாயிறு**
1தீமோ. 5:1–10

தி. வ.
1தீமோ. 5:1–2
**“முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப்போலவும் ... பாவித்து, புத்திசொல்லு”**

மாலை
உபா. 28:1–12

சிந்தனை
**முதியோர் நமக்கு சுமை அல்ல. அவர்கள் நம்மை சுமந்தவர்கள்.**

மனித வாழ்வில் முதுமை என்பது மிகவும் முக்கியமானது. வாழ்வின் ஓட்டத்தில் மிகவும் சிறப்பாக ஓடி ஆடி உழைத்து குடும்பங்களின் உயர்வுக்காக செயல்பட்டுவிட்டு ஆடி அடங்கிப்போன காலம் என முதுமை காலத்தை கூறலாம். இந்த காலக்கட்டத்தில் நோய்களின் தாக்குதல் அமைதிக்குறைவு என அங்கலாய்க்கும் நிலையில் அடைக்கலமும் பராமரிப்பும், அரவணைப்பும் ஆதரவும் தேடி இன்றைய முதியோர்கள் தவிக்கிறார்கள்.

இன்று முதியோரை நன்கு கவனிக்கும் தன்மை மிகவும் குறைந்துவிட்டது என்பதற்கு சான்றாக முதியோர் காப்பகங்கள் பெருகிக்கொண்டே இருக்கிறது. தொடக்ககால திருச்சபையில் முதியோரை பராமரிக்கும் தன்மையில் குறைவு ஏற்பட்டு புகார்கள் எழுந்ததால் புனித பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தின் வழியாக முதியோரை கடிந்து கொள்ளாமல் அவர்களை தந்தை தாயாக நினைத்து அன்பாக போதனை வழங்கவேண்டும் என்கிறார். முதியோரைப் பற்றிய பவுல் அடியாரின் போதனைகள் இன்றைய திருச்சபைக்கும் சமூகத்துக்கும் பெரும் சவாலாக உள்ளது.

உலக முதியோர் தினம் திருச்சபைகளில் முதியோர் ஞாயிறு என்ற எண்ணங்களோடு மட்டும் நின்று விடாமல் முதியோரை தந்தையாக, தாயாக, மாமாவாக, மாமியாக, தாத்தாவாக, பாட்டியாக பாவித்து கிறிஸ்துவின் அன்பை பொழிந்து மிகவும் நன்றாக கவனித்து பராமரிப்போம். நல்ல வசதிபடைத்தோர் தங்கள் முதியோரை தங்கள் இல்லத்தில் வைத்து பராமரிக்காமல் முதியோர் இல்லங்களுக்கு அனுப்பி வைப்பது வேதனையான அனுபவம். கருத்தொருமித்த கணவன் மனைவியை பிள்ளைகள் பிரித்து வைத்தார்கள். அண்ணன் வீட்டில் அப்பா, தம்பி வீட்டில் அம்மா என்கிறது ஒரு புதுக்கவிதை இதுவும் உண்மைதான் காலம் வரை ஒன்றாயிருக்கவேண்டியவர்களை முதுமையிலே பங்குபோட்டு வேதனைப்படுத்துவதும் பாவமே என்பதை உணருவோம். நாம் முதியோரை ஏற்றுக்கொண்டால் பிற்காலத்தில் நாமும் ஏற்றுக்கொள்ளப்படுவோம்.

# ஆசிவழங்கும் முதியோர்

2011
**செப்டம்பர்**
**26**
**திங்கள்**

காலை
ஆதி. 47:1–7

தி. வ.
ஆதி. 47 : 7
**"...யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்தான்"**

மாலை
மாற். 5:35–43

சிந்தனை
**ஆசி வழங்குதலும் ஆசி பெறுதலும் வாழ்வில் தேவை.**

*கொடிய பஞ்சத்தின் வாடிய இறை மக்களாகிய இஸ்ரவேலர் யோசேப்பின் நிமித்தமாக எகிப்து நாட்டில் தஞ்சமடையும் வாய்ப்பினை பெற்றனர். யோசேப் எகிப்து நாட்டில் உயர்ந்த பதவி வகித்தபடியால் தன் குடும்பத்தாரை அந்த நாட்டில் வைத்து பராமரிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அங்கே சென்று அரசன் பார்வோனை சந்தித்த யோசேப்பின் தந்தை யாக்கோபு தங்களுக்கு அடைக்கலம் தந்த அரசன் பார்வோனை ஆசீர்வதித்தார்.*

*முதியோரின் ஆசி நமக்கு மிகவும் முக்கியமானது. ஆனால் இன்றைய பிள்ளைகளோ இதை உணராமல் கே— சொல்— அவர்களை மதிக்காமல் மிகவும் அற்பமாக நடத்துகிறார்கள். இதனால் ஆசிக்கு பதிலாக சாபத்தையே பெற்று சங்கடப்படுகிறார்கள். அதே வேளை முதியோர் வழங்கும் ஆசியின் மகத்துவத்தை அறிந்திருக்கும் ஞானமுள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல அறிவுரைகளை வழங்கி என்ன முக்கிய காரியங்களுக்கு சென்றாலும் தாத்தா, பாட்டி என்னை ஆசீர்வதியுங்கள் என்று சொல்— ஆசிபெற தூண்டுவார்கள். நமது பிள்ளைகளும் நாமும் முதியோரின் ஆசி பெற முனைப்புடன் செயல்படுவோம்.*

*யாக்கோபு பார்வோனுக்கு ஆசி வழங்கியவுடன் உமக்கு வயது என்ன என்று பார்வோன் அரசன் கேட்கிறான். உடனே இவர் 130 வயது என்கிறார். இதன் கருத்து என்ன? இந்த முதிர் வயதில் யாக்கோபு வழங்கிய ஆசியை பார்வோன் மிக முக்கியமானதாக நினைக்கிறார். திருமறையிலும் முதியோரின் ஆசியை பெற்ற பலரையும் பார்க்கிறோம். நமது ஆண்டவர் இயேசுவின் வாழ்வைப் பாருங்கள் சிமியோன் என்ற முதியவர் அவரை ஆசீர்வதித்ததை லூக். 2 : 25—34 வசனங்களில் பார்க்கிறோம். ஆகையால் முதியோர் திருச்சபையின் போதகர்கள், பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் பெரியோரின் ஆசி நமக்கு மிகவும் முக்கியம். முதியோர் நமக்கு ஆசிவழங்க ஆயத்தத்தோடு காத்திருக்கிறார்கள் அவர்களின் ஆசியை பெறுவோம். அத்துடன் இறை ஆசியையும் நிறைவாக பெற்று இன்பமுடன் வாழுவோம்.*

# ஒருமைப்பாட்டில் சான்று பகருதல்

**2011**
**செப்டம்பர்**
**27**
**செவ்வாய்**
**தென்னிந்தியத் திருச்சபை நாள்**

காலை
ரோ. 8:31–39

தி. வ.
ரோ. 8 : 39

**"உயர்வானாலும், ... கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டா தென்று நிச்சயித்திருக்கிறேன்"**

மாலை
சங். 66

சிந்தனை
**ஒன்றும் ஒன்றும் இணைந்தால் ஒன்றே.**

மன்னா சேர்ப்போம்

இந்திய திருச்சபை வரலாற்றிலே பொன்னெழுத்தால் பொறிக்கப்பட வேண்டிய நாள் 1947 செப்டம்பர் 27—ம் நாள் ஆகும். அன்று தான் சென்னை புனடித ஜார்ஜ் பேராலயத்தில் வைத்து தென்னிந்திய திருச்சபை (C.S.I.) உருவான நாள். இதை தூய ஆவியரின் மாபெரும் செயல்பாடு என திருச்சபைத் தலைவர்கள் வர்ணித்துள்ளனர். முரண்பட்டு நின்ற சபைகள், ஒன்றுபட்ட அனுபவம் சாதாரண காரியமல்லவே தங்களது தனி கோட்பாடுகளை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு ஆண்டவரின் பிள்ளைகள் நாம் நமக்குள்ளே பிரிவினை வேண்டாம் என்று ஒன்றாய் இணைந்திருப்பது ஆண்டவரின் அற்புத செயலாற்றல். இன்று 22 திருமண்டிலங்களைக் கொண்ட மாபெரும் திருச்சபையாக தென்னிந்திய திருச்சபை உருவெடுத்து நிற்கிறது.

ஒற்றுமையாய் வாழ்வதாலே உண்டு நன்மையே வேற்றுமையை வளர்பதினாலே விளையும் தீமையே என்கிறார் ஒரு கவிஞர் இறைமகன் இயேசு நம்மிலே அதிகமாக விரும்புவது ஒருமைப்பாட்டையே. (யோவான் 17 : 21) இதனாலேயே இயேசுவின் பிள்ளைகள் அவரது ஒளியிலே நடந்தால் ஒருவரோடு ஒருவர் நட்புறவு கொண்டிருப்போம் என தூய யோவான் (1யோவா. 1 : 7) கூறுகின்றார். நமது இன்றைய தியான வசனமாகிய ரோ. 8 : 39—இல் கிறிஸ்து இயேசுவின் வழியாக அருளப்பட்டிருக்கும் கடவுளின் அன்பி—ருந்து நம்மைப்பிரிக்கவே முடியாது என்கிறார் புனித பவுல் நமது குடும்பங்களிலும், திருச்சபைகளிலும் இப்படிப்பட்ட பிளக்க முடியாத அன்பும் உறவும் உருவாகி ஒருமைப்பாட்டில் சான்று பகர வேண்டும்.

இன்று ஒருமைப்பாட்டில் சான்று பகர வேண்டிய நமது குடும்பங்களும், திருச்சபைகளும் கோஷ்டி சண்டைகளாலும் உள் பூசல்களாலும் குழம்பிக்கிடக்கின்றன. கூடி வாழ்ந்தால் கோடி நன்மைகள் உண்டு என்பதை நினைவில் கொண்டு செயல்படுவோம்.

# ஏற்றுக் கொள்ளும் முதியோர்

*2011*

**செப்டம்பர்**

*28*

**புதன்**

காலை

லூக். 15:11–32

தி. வ.

லுக். 15 : 32

**“உன் சகோதரனாகிய இவனோ.. காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்”**

மாலை

உபா. 30:11–20

சிந்தனை

**முதியோர் அலைக்களிக்கப்பட வேண்டியவர்கள் அல்ல. அவர்கள் ஆலோசனை வாழ்வு தரும்.**



தந்தையின் அன்பை மறந்து அவரை விட்டுப் பிரிந்து மனம்போன வழிகளிலெல்லாம் அலைந்து அலைக்கழிக்கப்பட்ட நிலையில் மனம் திருந்தி வந்த இளையமகனை பரிவோடும் பாசத்தோடும் ஏற்றுக்கொண்ட தந்தையை திருமறையில் காண்கிறோம். ஆனால் அவரது மூத்த மகனோ தனது தந்தை தம்பியை ஏற்றுக்கொண்டு விருந்து கொண்டாடுவதை கடுமையாக எதிர்க்கிறான்.

தங்கள் பிள்ளைகளோ பேரன் பேத்திகளோ யாராக இருந்தாலும் என்ன குற்றமிழைத்தாலும் மன்னித்து அவர்களை அன்போடும் பண்போடும் ஏற்றுக்கொள்ளும் தன்மை முதியோரிடம் உண்டு. வறிய நிலையில் வாடினாலும் இருக்கும் உணவை தங்கள் பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடுத்துவிட்டு உணவு உண்ணாமலேயே வாழும் பெற்றோர் முதுமையில் கைவிடப்பட்டு ஏற்றுக்கொள்ள எவருமின்றி தவிக்கும் பரிதாப நிலையைத்தான் இன்றைய சமூகத்தில் பார்க்கிறோம் நேற்று திண்ணைகளில் மட்டுமேயிருந்த தாத்தா, பாட்டிகள் இன்று விசாலமாக உலவுகிறார்கள் —“அனாதை இல்லங்களில்” என்கிறது ஒரு புதுக்கவிதை.

உத்தியோகத்தில் இருக்கும் வரை கிடைக்கும் மதிப்பும் மரியாதையும் நல்ல கவனிப்பும் ஓய்வு பெற்றபின் கிடைப்பதில்லை. இன்றைய முதியோருக்கு அத்துடன் அவர்களை பேசிடாமலும் செயல்பட விடாமலும் ஓரத்தில் ஒதுக்கி வைத்து மனதாலும் உடலாலும் அவர்களை துன்புறுத்தும் நிலைதான் நிலவுகிறது. சிலர் தங்கள் முதியோரை வீட்டைவிட்டே விரட்டியடிக்கும் துரோகச் செயல்களையும் செய்கிறார்கள். எப்படித்தான் கொடுமைப்படுத்தினாலும் அவைகள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு அப்படிச் செய்பவரையும் அன்போடு ஏற்றுக்கொள்ளுகிறார்கள் முதியோர். காரணம் முதியோர் கள்ளம் கபடமில்லா வெள்ளை மனம் கொண்ட குழந்தைகளைப் போன்றவர்கள் ஆகையால் நம்மை ஏற்றுக்கொள்ளும் முதியோரை நாமும் பரிவுடன் ஏற்றுக்கொண்டு மிகச்சிறப்பாக வாழவைப்போம்.

2011
செப்டம்பர்
29
வியாழன்

காலை
2தீமோ. 1:1–5
தி. வ.
2தீமோ. 1 : 5
**“அந்த விசுவாசம் ... உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் ..அது உனக்குள்ளும்நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்”**
மாலை
உபா. 32:1–13

சிந்தனை
**முதிர் வயதினரின் விசுவாசம் பின் சந்ததியிலும் தொடர வேண்டும்.**

# விசுவாசத்தில் முன் மாதிரியாகும் முதியோர்

*அமெரிக்கா போன்ற நாடுகளில் ஆலயம் செல்பவரின் எண்ணிக்கை அதிகரிக்க, இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஆலயம் செல்பவரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே இருக்கிறது என்றும் ஆலயங்களில் முதியோர்கள் தான் அதிகமாக காணப்படுகிறார்கள் என்றும் ஒரு புள்ளி விபரம் அண்மையில் வெளியானது நம்முடைய பகுதிகளிலும் இன்று முதியோர்கள் விசுவாசத்தில் முன் மாதிரியாக விளங்குகிறார்கள் என்பது உண்மையே! 2தீமேத். 1 : 5—ல் உன் விசுவாசம் உன் பாட்டி ஆகிய லோவிசாளுக்கும் இருக்கிறது என்கிறார் தூய பவுல் அதுபோல் தீமேத்தேயுவின் தாயாரும் விசுவாசத்தாய் என அப். 16 : 1 கூறுகின்றது. பெற்றோர் மற்றும் தாத்தா, பாட்டிகளின் நல் விசுவாசம் பிள்ளைகளின் பிள்ளைகளிடமும் காணப்படுகிறது என்றால் அது மிகையாகாது.*

*இன்றைய நமது குடும்பங்களிலுள்ள முதியோர்கள் பாடல்களைப் பாடுவது திருமறையைக் கற்று தியானிப்பது ஜெபிப்பது ஆலயம் செல்வது ஆகியவற்றில் நமக்கெல்லாம் முன் மாதிரியாகவே விளங்குகின்றனர். கடவுளின் காரியங்களுக்கு காணிக்கைப் படைப்பதிலும் ஆர்வத்துடன் செயல்படுகின்றனர் முதியோரின் விசுவாச முன்மாதிரியை பின்பற்ற வேண்டிய இளையோரும் மற்றோரும் அதை வெறுக்கும் சூழலும் பெருகி வருகிறது. காலை எழுந்து திருமறை வாசித்து ஜெபிப்பதும், திருமறையை படிக்க அவர்கள் காட்டும் உற்சாகமும் நமக்கு மாதிரி. இது நல்ல செயலல்ல தனது பாட்டியின் விசுவாசத்தை பின்பற்றி விசுவாச ஓட்டம் ஓடும் தீமோத்தேயு போல நாமும் மாற வேண்டும்.*

*நம்மோடு வாழும் முதியோரிடம் இருக்கும் நல்ல செயல்களை நாம் பின்பற்றி நடக்க வேண்டும் அது நமது வாழ்வை உயரச் செய்யும் நமது நாட்டின் தந்தையாக விளங்கிய மகாத்மா காந்தியின் அகிம்சை வழி இன்றும் நமக்கு முன் மாதிரியாகவே இருக்கின்றது. ஆகையால் நம்மோடிருக்கும் முதியோரால் நமது ஆத்மீகவாழ்வு வளரும் விசுவாசம் பெருகும்.*

2011
செப்டம்பர்
30
வெள்ளி

காலை
யோபு. 12:7–13

தி. வ.
யோபு 12 : 12
**"முதியோரிடத்தில் ஞானமும் வயது சென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே"**

மாலை
மாற். 7:24–30

சிந்தனை
**முதியோர் செல்லா காசுகள் அல்ல, நல்ல காசுகள்.**

மன்னா சேர்ப்போம்

# ஞானமும், புத்தியுமுள்ள முதியோர்

கடவுள் மனிதனுக்கு அருளும் ஞானமும் புத்தியும் அனைவருக்கும் உள்ளது ஆனால் முதியோரிடம் அதிகமாக இருக்கிறது காரணம் முதியோரின் வாழ்க்கை அனுபவம் ஞானத்தையும் புத்தியையும் அதிகமாக கொண்டுள்ளது. மனித வாழ்விலே அளவிடமுடியாத துன்பத்தை அனுபவித்த யோபுவின் நிலையறிந்து அவரைப் பார்த்து ஆறுதல் சொல்ல வந்த மூன்று நண்பர்களும் மிகச் சிறந்த ஞானிகள். அவர்கள் யோபு—வுக்கு சொன்ன ஆறுதல் வார்த்தைகள் அவரது மனதை வருடிவிட்டது என அறியலாம் இதனால் நொந்துபோன யோபு நீங்கள் மூவரும் மிகவும் சிறந்த ஞானிகள் தான் ஆனால், எனக்கும் ஞானமும், புத்தியும் உண்டு உங்களிலும் நான் தாழ்ந்தவன் அல்ல என்கிறார் யோபு 12 : 3—ல் அதனைத் தொடர்ந்து முதியோரிடம் ஞானமும் அறிவும் இருக்கும் என்கிறார் யோபு.

ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம் என்கிறார் ஞானி. நீதி. 9 : 10—இல் முதியோர் எப்போதுமே கடவுளுக்குப் பயந்து வாழ்வதுடன் இறை நம்பிக்கையிலும் சிறந்து விளங்குகிறவர்கள் ஆகையால் அவர்கள் வழங்கும் அறிவுரைகள் இளைய தலைமுறையினருக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை இதனால் தான் ஞானத்தையும் மெய் உணர்வையும் தேடிப் பெறு நான் சொல்வதை மறந்துவிடாதே என்கிறார். உலகப்புகழ் பெற்ற ஞானி சாலமோன் நீதி. 4 : 5 தொடர்ந்து வசனம் 11—ல் ஞானத்தின் வழிகளை உனக்கு கற்பித்திருக்கிறேன் என்றும் கூறுகின்றார், முதியோர் சொல்லும் முது நெல்—க்காயும் என்பார்கள், ஆரம்பத்தில் நெல்—க்காய் கசக்கும் பின்பு நல்ல சுவையாக இனிக்கும் இது போல் தான் முதியோரின் நல் ஆலோசனைகள் ஆரம்பத்தில் சற்று கடினமானதாகத்தான் இருக்கும் ஆனால் பின்பு அதன் அருமை புரியும்.

அவர்கள் நமக்கு பெரும் செல்வமானவர்கள், ஞானமும், அறிவும், மிகுந்த அவர்களது அறிவுரையும் ஆலோசனையும் தேவையென உணர்ந்து செயல்படுவோம்.